**அடிப்படை சமூக சேவைகளை இலக்கிட்டு வளர்ந்துவரும் பிராந்தியங்களை முன்னேற்றுகின்ற செயற்திட்டம் - 2018**

---

அடிப்படை சமூக சேவைகளை இலக்கிட்டு வளர்ந்துவரும் பிராந்தியங்களை முன்னேற்றுகின்ற செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் யப்பான் சர்வதேச கூட்டு நிறுவனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 மார்ச் 28 ஆந் திகதிய எஸ்எல்பி 105 கடன் உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்த்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்திற்கு நிதி அமைச்சினுடைய தேசிய திட்டமிடல் திணைக்களம், தற்போது நிதி அமைச்சினுடைய செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைகளம் நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாக சுகாதார அமைச்சு மற்றும் கிழக்கு, வட மேல், மத்திய மற்றும் சப்பிரகமூவா மாகாண சபைகள் காணப்படுகின்றன. சுகாதார, வைத்திய முறைமை மேம்படுத்தல் மற்றும் இரண்டாம் நிலை வைத்தியசாலைகள் மற்றும் அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்தி கூட்டுத்தாபனங்களில் வசதிகள் மற்றும் உபகரணங்களை மேம்படுத்துவதன் ஊடாக அத்தியவசிய மருந்துகளின் உற்பத்தி இயலளவை பலப்படுத்தல், இதன் மூலம் தொற்றா நோய்கள் முகாமைத்துவத்தை மேம்படுத்த பங்களித்தல் என்பன செயற்த்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,332 மில்லியனுக்குச் சமமான யப்பான் ஜென் 4,760 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 5,155 மில்லியனுக்குச் சமமான யப்பான் ஜென் 3,935 மில்லியன் யப்பான் சர்வதேச கூட்டு நிறுவனத்தினால் நிதியளிக்கப்பட வேண்டுமென இணங்கப்பட்டது. மீதி பெறுமதி ரூபா 1,177 மில்லியன இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2012 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூலை 23 அளவில் பூர்த்தியாக்கப்படவேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது

தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

செயற்திட்டம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினுடைய உபகரணங்கள் பெறுகை மற்றும் கட்டிடங்கள் புதப்பித்தலுடன் தொடர்புபட்ட ஒப்பந்தக்காரரிற்கு 31 திசமிபர் 2018 ல் மேற்கொள்ளப்பட்ட நேரடிக் கொடுப்பனவுகள் மொத்தமாக ரூபா. 260.07 மில்லியனிற்கு சமனான யப்பான் ஜென் 152.99 மில்லியன் செயற்திட்ட கணக்குகளிற்கு கொண்டுவரப்படவில்லை. | கொடுப்பனவுகள் குறைத்து காட்டப்பட்டமை. | இப் பெறுமதி 2019 ஆம் ஆண்டில் கணக்கிடப்படும் | ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் நிதிக்கூற்றுகளில் பதிவிடப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

அம்புலன்ஸ் வண்டிகளை வழங்குவதன் மூலம் மருத்துவ சிகீச்சை வசதிகளை மேம்படுத்துதல், கல்கமுவ, களுவாஙஞ்சிக்குடி, வறக்காப்பொல மற்றும் தெனியாய ஆதார வைத்தியசாலைகளினுடைய வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினுடைய உற்பத்தி இயலளவு அபிவிருத்தி என 06 பிரிவுகளின் கீழ் செயற்திட்டத்தினுடைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திட்டத்தின் நடவடிக்கைகளான அம்புலன்ஸ் வண்டிகளை வழங்குவதன் மூலம் மருத்துவ சிகீச்சை வசதிகளை மேம்படுத்துதல், ஆதார வைத்தியசாலைகளினுடைய வசதிகளை மேம்படுத்துதல் என்பன 31 திசம்பர் 2018 ல் நிறைவடைந்துள்ளது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 31 மே 2017 ல் நிறைவடையுமென எதிர்பார்க்கப்பட்ட அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினுடைய உபகரணங்கள் பெறுகை மற்றும் கட்டிடங்கள் புதப்பித்தலிற்கான ஒப்பந்தம் 02 நவம்பர் 2018 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஆகையினால், அமைவிட மாற்றங்கள் மற்றும் பயன்பாட்டு சேவைகள் வழங்கலில் தாமதம் போன்ற காரணங்களினால் யப்பான் ஜென் 1,239.88 மில்லியன் ஆன அசல் ஒப்பந்த விலை யப்பான் ஜென் 1,262.86 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் பொதுமக்களிற்கு சென்றடயவில்லை. | நிர்வாக பிரச்சனைகள் காரணமாக பெறுகை நடைமுறைகள் தாமதமாக பின்பற்றப்பட்டன. | முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும், எதிர்கால செயற்திட்டங்களில் அவ் பலவீனங்களை தவிர்கவும், தாமதங்களிற்கான காரணங்கள் ஆய்வுசெய்யப்பட வேண்டி இருக்கின்றது. |

### 3.3 கள விஜயங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள பல்வேறுபட்ட காரணங்களினால், அந்தந்த வைத்தியசாலைகளிற்கான செயற்திட்த்தினூடாக பல கட்டிடங்கள் கட்டப்பட்டு மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் பொதுமக்களிற்கான சேவைகள் வழங்குவதற்கான நோக்கத்திற்காக பயன்படுத்படவில்லை என்பது ஒக்டோபர் 2018 இல் மேற்கொள்ளப்பட்ட கள விஜயத்தின் போது வெளிப்படுத்தப்ட்டது.

| இல. | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| அ. | வரிசை அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலிற்கமைவாக, ஒரு அதிதீவிர சிகீச்சைப் பிரிவில் நோயாளிகள் படுக்கையானது 08 இலத்திரனியில் சொக்கற்களுடன் (Sockets) குறைந்தபட்சம் 194 சதுர அடி பரப்பளவில் பராமரிக்கப்பட வேண்டும், வறக்காப்பொல ஆதார வைத்திய சாலையில் தீவிர சிகீச்சைப் பிரிவில் அவ்வாறு பராமரிக்கப்படாததுடன் 05 சிகீச்சை வழங்கும் படக்கைகள் எந்தவித ஒரு இலத்திரனியல் சொக்கற்களும் (Sockets) இல்லாது 119 சதுர அடி பரப்பளவில் காணப்பட்டன. மேலும களஞ்சியம், களுவும் பகுதி மற்றும் கழிவுகள் | பொது மக்களிற்கு வழங்கப்படும் சேவையின் தரம் எதிர்பார்த அளவிற்கு அடையாது போகலாம். | கட்டடத்தின் வடிவமைப்பு கட்டத்தில் உள்ள குறைபாடுகள் எளிதில் சீர் செய்ய முடியாது. மேலும், தற்போதைய நிலையில் அதிகபட்ச சேவைகள் முன்னெடுக்கப்படும். | சிகீச்சை வசதிகளை மேம்படுத்தவும் தரநிர்ணயங்களை பின்பற்றவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிஇருக்கின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அகற்றும் பகுதி போன்ற அதிதீவிர சிகீச்சைப் பிரிவு கட்டிடத்திற்குரிய ஏனைய வசதிகள் தர உத்தரவாத பத்திரங்களில் குறிப்பிட்டப்பட்ட தராதரங்களிற்கமைவாக இருக்கவில்லை. | | | |
| ஆ. | உட்கூரை உடைவு, சுவர் விரிசல், கூரையில் இருந்து நீர்கசிவு, வடிகால்கள் தடுப்பு, கதவுகள் பொருத்துவதில் பிரச்சனைகள், தரை மாபிள்களில் ஏற்பட்ட சேதம்கள், வடிகால் அமைப்புகளில் உள்ள பிரச்சனைகள் மற்றும் மின் விநியோகத்திலுள்ள பலவீனங்கள் போன்ற கட்டுமான மற்றும் பராமரிப்பு குறைபாடுகள் 2017 யூலை பொது மக்கள் பாவனைக்காக 04 வைத்திய சாலைகளிலும் திறக்கப்பட்ட நவீனமயப்படுத்தப்பட்ட கட்டிடங்களிலும் தெரியவந்துள்ளது. | எதிர்பார்க்கப் பட்ட நன்மைகள் பொது மக்களால் நிலையாக பெறப்படாது. | கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சில குறைபாடுகள் தற்போது சரிசெய்யப்பட்டுளது டன் மீதி வேலைகள் சரிசெய்ய மாகாண சுகாதார திணைக்களம் செயற்படுகின்றது. | அபிவிருத்தி செய்யப்பட்ட வசதிகளினுடைய பராமரிப்பு வேலைகள் ஒழுங்காக செய்யப்பட வேண்டும். |

**3.4 குறைபயன்பாட்டுடைய வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் கண்டறியப்பட்டன.

| இல. | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இத் திட்டத்தினால் மருத்துவ மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்ட வைத்தியசாலைகளிற்கு வரிசை அமைச்சினால் வைத்திய அதிகாரிகள் மற்றும் ஏனைய திறன் உத்தியோகத்தர்கள் போதுமான அளவு வழங்கப்படவில்லை என அவதானிக்கப்ப பட்டிருந்ததுடன் இதன் விளைவாக, இத் திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட பொது சுகாதார சேவைகளை கொண்ட பகுதிகளில் வாழும் மக்களின் ஆயுட்காலம் அதிகரிப்பதற்கான நோக்கங்கள் சவால்களை எதிர்நோக்கின. பதிவுகளிற்கு அமைவாக, கல்கமுவ, தெல்தெனிய, வறக்காப்பொல மற்றும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலைகளில் 32 வைத்திய நிபுணர்கள் உள்ளடங்கலாக 163 மருத்துவ அதிகாரிகள் மற்றும் 327 பதவிநிலை தாதியர்கள் பதவிகள் வெற்றிடமாக இருந்தன. திட்டத்தினால் மேம்படுத்தப்பட்ட வைத்தியசாலைகளில் சிறுநீரக சுத்திகரிப்பு பகுதி, சத்திர சிகீச்சைக் கூடம், பெண்நோயியல் மற்றும் மகப்பேற்றியல் பகுதிகள் போன்ற ஏனைய பகுதிகளிலல் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் வழங்கும் போது முதிரா குழந்தைகள் பகுதிகள், சத்திர சிகீச்சை அதி தீவிர பகுதிகள் மற்றும் மருத்துவ அதி தீவிர பகுதிகள் 2017 யூலையில் இருந்து பாயன்படுத்தப்படாமல் காணப்பட்டன. | திட்டத்தினுடைய எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ள முடியாது. | மாகாண சுகாரார சேவைகள் திணைக்களம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வரிசை அமைச்சிற்கு ஒரு கோரிக்கை விடுத்துள்ளது. | பொது மக்களிற்கு வினைத்திறனான சேவைகளை வழங்கும் வகையில் தாமதம் இன்றி ஊழியர் தேவைப்பாடுகள் நிரப்பப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | கல்கமுவ, தெனியாய, வறக்காப்பொல மற்றும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைகளில் திறன் ஆளணி போதாமையால், ரூபா.97.32 மில்லியன கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட உயிர் மருத்துவ உபகரணங்கள் பாவனையற்று காணப்பட்டது. | மேற்ப்டி | மாகாண சுகாரார சேவைகள் திணைக்களம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வரிசை அமைச்சிற்கு ஒரு கோரிக்கை விடுத்துள்ளது. இருப்பினும், இந்த மருத்துவ உபகரணங்கள் உயர்ந்தபட்ச அளவிற்கு பயன்படுத்தப்படும். | மேற்ப்டி |